திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை – திரு.ஆ.அகஸ்டின்ராஜ்.,

செ.மு.ந.க. எண்.17082/ 2018/ பஅ3 நாள் :22.05.2023

| | |
|---|---|
| பொருள்: | கருணை அடிப்படை நியமனம் – ஊரக வளர்ச்சி அலகு – திருவள்ளூர் மாவட்டம் – பூண்டி ஊராட்சி ஒன்றியம் – திரு.L.பாஸ்கர் (லேட்) உதவியாளர் என்பவர் 08.04.2018 அன்று பணியிடைக் காலமானவர் – வாரிசுதாரர் திரு.L.ராமகிருஷ்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்யப்பட்டு அரசாணை வரப்பெற்றுள்ளது – பணிவரன்முறை செய்து உத்தரவிடல். |
| படிக்கப் பட்டது | அரசாணை (2ப) எண்.18, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ4) துறை , நாள்.15.03.2023 |

உத்தரவு–

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உதவியாளராக பணிபுரிந்து 08.04.2018 அன்று பணியிடைக்காலமான திரு.L.பாஸ்கர்(லேட்) என்பவரின் வாரிசுதாரரும் அவரது சகோதரருமான திரு.L.ராமகிருஷ்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது. பார்வையில் காணும் அரசாணையில் தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 27.05.2021 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி அரசாணையின் அடிப்படையில் தனியருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் 27.05.2021 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

மேற்படி விவரம் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

Augustinraj 22/5/2023

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திருவள்ளூர்.

பெறுநர்

திரு.L.ராமகிருஷ்ணன்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி பிரிவு)
திருவள்ளூர்.
(சார்ந்த அலுவலர் மூலமாக)

22/5/23

நகல்

1. பஆ2 பிரிவு.
2. பஅ3 இருப்பு கோப்பு.